12. தமிழ்நாட்டில் வான்வெளி மற்றும் உயர் தொழில்நுட்ப சாதனங்களின் உற்பத்தி வளர்ச்சியை ஊக்குவிக்கும்வகையில், காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூரில் வான்வெளி மற்றும் பாதுகாப்புப் பூங்காவில் நிறுவப்படவுள்ள உயர் கணினி மற்றும் பொறியியல் வடிவமைப்பு மையத்தில் புதுமை கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில் முனைவோருக்கான சிறப்பு மையம் ஒரு இலட்சம் சதுர அடி பரப்பளவில் சுமார் 100 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) இயந்திர தளவாடங்களுக்கு வழங்கப்படும் மானியத்தை உயர்த்துதல் மற்றும் கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி வழங்குதல் குறித்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1. தமிழ்நாட்டில் சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், உயர்தர மற்றும் மேம்பட்ட தொழில்நுட்ப இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை நிறுவி உற்பத்தியைப் பெருக்க தகுதியான இயந்திர தளவாடங்களின் மதிப்பில் 25 விழுக்காடு முதலீட்டு மானியமாக தற்போது வழங்கப்பட்டு வரும் 30 இலட்சம் ரூபாய் என்ற மானிய உச்சவரம்பை உயர்த்தி, 50 இலட்சம் ரூபாயாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு தோராயமாக 20 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.

2. தமிழ்நாட்டில் 64 கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்களில் 10,000–க்கும் மேற்பட்ட கிராமப்புற பெண்களுக்கு தொடர்ச்சியான வேலைவாய்ப்பு கிடைத்தது. கஜா புயலினால் ஏற்பட்ட தாக்கத்தினால் தஞ்சாவூர், புதுக்கோட்டை, தேனி மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள கயிறு சங்கங்கள் போதுமான மூலப்பொருட்கள் கிடைக்காமல் பாதிப்படைந்துள்ளன. இந்த கடினமான சூழ்நிலையினைச் சமாளித்து, கயிறு சங்கங்கள் எதிர்காலத்தில் சிறப்பாக இயங்கும்பொருட்டு மேற்படி கயிறு தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 2.33 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)